தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 204/பேரூ/2023
நாள்: 08.09.2023

திரு. எஸ். தாவீதுராஜா,
ஆலங்குளம்,
தென்காசி மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சி,
தென்காசி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், ஆலங்குளம், 9/458, தென்காசி மெயின் ரோடு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு. எஸ். தாவீதுராஜா என்பவரது 10.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2023 அன்று பெறப்பட்டு 204/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், ஆலங்குளம், 9/458, தென்காசி மெயின் ரோடு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு. எஸ். தாவீதுராஜா என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" நான் மேற்கண்ட விலாசத்தில் அக்னி சர்வீஸ் டிரஸ்ட் மூலமாக தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு நகரை சுத்தம் செய்யும் பணியை செய்து வருகிறேன்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பேரூராட்சி நிர்வாகம் மூலம் தமிழ் முரசு நாளிதழில் 20.05.2023 அன்று டெண்டர் கோருவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் 01.06.2023 பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாகவோ/வங்கி வரைவோலையாகவோ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டு, இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் ஒப்பந்தப்புள்ளியில்

கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 02.06.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராக இருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் அல்லது அவருக்கு அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

நான் ஆலங்குளம் பேரூராட்சி நிர்வாகம் வெளியிட்ட ஒப்பந்தப்புள்ளியில் 11வது ஒப்பந்தமான பேரூராட்சியில் வார்டு எண் 1 முதல் 15 முடிய உள்ள தெருக்களில் தினசரி முதல்நிலை சேகரிப்பு வாகனத்தில் சென்று வீடுவீடாக குப்பைகளை சேகரம் செய்து தரம் பிரித்து வளமீட்பு பூங்காவிற்கு கொண்டு செல்லுதல், வளமீட்பு பூங்கா பாதுகாத்து பராமரித்தல், சாலை மற்றும் தெருக்களை சுத்தம் செய்தல், மழைநீர் கால்வாய்களை சுத்தம் செய்தல், பொது சுகாதார வளாகங்கள் பராமரித்தல், புது சுகாதார வாகனங்கள் இயக்குதல் மற்றும் அவ்வப்போது குறிப்பிடப்படும் இதர பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்குவதற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தத்தை அக்னி சர்வீஸ் ட்ரஸ்ட் என்ற தன்னார்வல அமைப்பின் தலைவர் என்ற முறையில் ஒப்பந்தத்தில் ரூபாய் 5000 வரைவோலை மூலம் கலந்து கொண்டேன். மேலும் 3.30 மணியளவில் எனது முன்னிலையில் அறிவிப்பில் கண்டவாறு செயல் அலுவலர் அவர்களிடம் ஒப்பந்தத்தை திறந்து ஒப்பந்தத்தின் ஒப்பு நோக்கு பட்டியல் தருமாறு கூறினேன். ஆனால் செயல் அலுவலர் அவர்கள் ஒப்பந்தத்தை திறக்க மறுத்துவிட்டார். மேலும் ஒப்புநோக்கு பட்டியலும் தரவில்லை என்பதால் ஒப்பந்தத்தில் ஏதோ முறைகேடு நடந்திருப்பது எனக்கு தெரிய வந்தது. அதனால் ஒப்பந்தத்திற்கான ஒப்பு நோக்கு பட்டியல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுத்தால் 05–06–2023 அன்று கேட்டும் செயல் அலுவலர் அவர்கள் தரமறுத்துவிட்டார். இதனால் ஆலங்குளம் பேரூராட்சியில் நடந்த வருடாந்திர ஒப்பந்தத்தில் மிகப்பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது என்பது உறுதியாகி உள்ளது.

மேலும் 21.6.2023 அன்று ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியில் நடைபெற்ற சாதாரண மன்றக் கூட்ட அழைப்பிதழில் பொருள் எண் 24 ஆக சேர்க்கப்பட்டு ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ் ஒரு நபர் தினக்கூலி 510 ரூபாய்க்கும், ஈஸ்ட்விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட் ஒரு நபர் தினக்கூலி 478 ரூபாய்க்கும், அக்னி சர்வீஸ் ட்ரஸ்ட் ஒரு நபர் தினக்கூலி 448 ரூபாய்க்கும் டெண்டர் கோரி உள்ளனர் என்பதை கூட்ட அழைப்பிதழ் மூலம் தெரிந்து கொண்டேன். இதில் அக்னி சர்வீஸ் ட்ரஸ்ட் மூலம் கோரப்பட்ட விலைப்புள்ளி ரூபாய் 448 மாவட்ட ஆட்சியர் அனுமதித்த விலையை விட 30 ரூபாய் குறைவாக உள்ளதால் ஆலங்குளம் பேரூராட்சிக்கு வருவாய் ஏற்படுவதாலும் அக்னி சர்வீஸ் டிரஸ்ட் ஒப்பந்த புள்ளியை மன்ற கூட்டத்தில் ஆதரவு தெரிவித்து நான்கு மன்ற உறுப்பினர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள் என்பதையும் தெரிந்து கொண்ட பின்பு ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடம் நான் செயலாளராக உள்ள அக்னி சர்வீஸ் ட்ரஸ்ட் நிறுவனம்தான் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரி உள்ளது. எனவே பணி ஆணை தருமாறு பலமுறை கேட்டும் இன்று வரை செயல் அலுவலர் அவர்கள் பணி ஆணை தர மறுக்கிறார். மேலும் எங்கள் நிறுவனத்தை நம்பி சுமார் 80க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் உள்ளதால் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே தாங்கள் தயவு கூர்ந்து 2023–2024ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப் புள்ளியில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதால் தமிழ்நாடு டெண்டர் வெளிப்படைத்தன்மை சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மூலம் தணிக்கை செய்து எங்களது அக்னி சர்வீஸ் ட்ரஸ்ட் நிறுவனத்திற்கு மேற்கண்ட டெண்டர் பணி ஆணையை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 21.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.08.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அரசாணை(நிலை) எண் 93 மற்றும் 94 நிதித்துறை, நாள் 30.3.2023–ன் அடிப்படையில் பேரூராட்சிமன்ற தீர்மானம் எண் 209, நாள்: 17.05.2023ன்படி ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்குவதற்காக மற்றும் இதர இனங்களின் தெரு மின் விளக்கு, குடிநீர் விநியோக உதிரிப் பொருட்கள் சப்ளை செய்ய செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக நாளிதழில் பிரசுரம் மேற்கொண்டும், முந்தைய ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு கடிதம் வாயிலாகவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு http://tntenders.gov.in இணையதளம் வழியாகவும், வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டு 02.06.2023 அன்று கீழ்க்கண்டவாறு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| 1. | பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் | 54 நபர்கள் |
| 2. | பொது சுகாதார வாகனங்கள் இயக்கும் பணி (கனரக வாகன உரிமம் பெற்று 2 வருடம் முன் அனுபவம்) | 6 நபர்கள் |
| 3. | குடிநீர் திட்ட பராமரிப்பு பணி | 12 நபர்கள் |
| 4. | தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி | 4 நபர்கள் |
| 5. | பிறப்பு இறப்பு பதிவு, வரியில்லா இனங்கள் கணினி மூலம் வசூல் செய்தல் பணி ( 3 வருடம் அனுபவம் பெற்று இருத்தல்) | 3 நபர்கள் |
| 6. | அலுவலக இரவு காவல் பணி மேற்கொள்ளுதல் | 1 நபர் |
| | மொத்தம் | 80 நபர்கள் |

அதில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்குவதற்காக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில்

1. ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ், திருநெல்வேலி
2. ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி
3. அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம்

ஆகிய மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்நிறுவனங்கள் சமர்ப்பித்த ஒப்பந்த விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு:-

| Sl.No. | Item | ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ், திருநெல்வேலி Rate (Rs.) | ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி Rate(Rs.) | அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம் Rate(Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Wages for Green Friends (Door to Door Collection) | 510 | 478.00 | 448.00 |
| 2 | Operating of Public Health Vehicles (HCV License & 2 years Experience) | 510 | 520 | 448.00 |
| 3 | Water Supply Maintenance Works | 510 | 478 | 448.00 |
| 4 | Operating of Street Lights & Maintenance Works | 510 | 478 | 448.00 |
| 5 | Tax & Non Tax Collection and Birth and Death Online Entry (3 Years Experience) | 510 | 0.00 | 448.00 |
| 6 | Night Watchman | 510 | 178.00 | 448.00 |
| 7 | Supervision | 20000 | 15000.00 | 14000.00 |
| 8 | Co-ordinator | 14000 | 12000.00 | 11000.00 |
| 9 | Admin cost | 12000 | 10000.00 | 10000.00 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மூன்று நிறுவனங்களில் ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ், திருநெல்வேலி நிறுவனம் பணியாளரின் ஒரு நாள் ஊதியமாக ரூ.510/– என்ற விலை விகிதத்திலும், ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி என்ற நிறுவனம் ரூ. 478/– என்ற விலை விகிதத்திலும், அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம் என்ற நிறுவனம் ரூ.448/– என்ற விலை விகிதத்தையும் குறிப்பிட்டுள்ளன. இது தொடர்பாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21.06.2023 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் பொருள் எண்.24 இல் கூட்டப்பொருள் சேர்க்கப்பட்டு பேரூராட்சி மன்றத்தால் பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியில் 2023–24 ஆம் ஆண்டிற்கு வார்டு 1 முதல் 15 முடிய உள்ள வார்டு பகுதிகளுக்கு பொது சுகாதாரம் குடிநீர் பராமரிப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 80 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள 02.06.2023 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளை கனிவுடன் பரிசீலித்தல், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பணியாளர்களின் தினசரி நுகர்வு கூலி நிர்ணயம் குறிப்பாணை ந.க.எண். M2/12587/2022 நாள் 07.2022இன்படி கீழ்க்கண்ட விவரப்படி 2022–23ஆம் நிதியாண்டிற்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | விபரம் | 2021–22 ரூ. | 2022–23 ரூ. |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரம் மற்றும் இதரப்பணிகள் (குடிநீர் பராமரிப்பு) | 411 | 478 |
| 2 | தெருவிளக்கு பராமரிப்பு | 425 | 494 |
| 3 | கனரக ஓட்டுநர் | 449 | 522 |
| 4 | கணினி பணி | 449 | 522 |

ஆனால் 02.06.2023 அன்று பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப் புள்ளியில் ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி ரேட்டிற்கு அதிகமாகவும், அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம் நிறுவனம் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி ரேட்டிற்கு மிகவும் குறைவாகவும், இரண்டு நிறுவனங்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2022–23ஆம் நிதியாண்டின் தினக்கூலி வரம்பு நிர்ணயத்திற்கு உடன்படவில்லை. மேலும் தற்போது பெறப்படும் ஒப்பந்தப்புள்ளியானது, 2023–24ஆம் வருடத்திற்குரியது. இதில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் புள்ளியியல் அடிப்படையில் 2023–24ஆம் நிதியாண்டிற்கு மேற்கண்ட நிறுவனங்கள் கூடுதலான தினசரி கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டி உள்ளதால் மேற்கண்ட நிறுவனங்கள் இதனை கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் அரசுக்கு எதிராக பணியாளர்கள் போராடக்கூடிய நிலை உள்ளது.

மேலும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.3 அக்னி சர்வீஸ் டிரஸ்ட் ஒரு புதிய முன் அனுபவம் இல்லாத நிறுவனம் என மன்றம் கருதுகிறது. இதனால் பேரூராட்சி பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரம் மற்றும் இதர பணிகள் திறம்பட செயல்படுத்த வாய்ப்பில்லை என மன்றம் கருதுகிறது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி நுகர்வு நிர்ணயத்தொகைக்கு நிகரான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண். 2 ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி என்ற நிறுவனம் திருநெல்வேலி மண்டலத்திலுள்ள பேரூராட்சிகளில் திருநெல்வேலி மாவட்டம் 15, தூத்துக்குடி மாவட்டம் 9 மற்றும் தென்காசி மாவட்டம் 14 ஆக மொத்தம் 38 பேரூராட்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஊதிய நிர்ணயத்தில் இணையான ஒரே மாதிரியான பணியாளர்களுக்கு பாகுபாடு இல்லாமல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி 2023–24 ஆம் நிதியாண்டிற்கு அங்கீகரித்து மன்றம் அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம் நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். தாவீதுராஜா என்பவர் ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் டெண்டர் அறிவிப்பாணை ந.க.எண். 264/2023/அ1 நாள் 18.05.2023–இல் வரிசை எண்.11 தொடர்பான பணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் உரிய இறுதி உத்தரவு பிறப்பிக்க கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) 17014/2023- ஆக பேரூராட்சிகளின் இயக்குநர் தென்காசி மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை பிரதிவாதியாகக் கொண்டு ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கானது 14.07.2023 அன்று விசாரணைக்கு வரப்பெற்று அனைத்து பிரதிவாதிகளுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டு 28.07.2023 அன்று வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் அரசு வழக்கறிஞர் மூலம் 28.07.2023 அன்று எதிர் வாதுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வொப்பந்த புள்ளியில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நிலுவையில் உள்ளதால் மன்றத் தீர்மானத்தின்படி பணி உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை என்ற விபரத்தினை பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்வதோடு இவ்வழக்கு தொடர்பான நீதிமன்ற தீர்ப்பாணையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(4) மனுதாரரும் மற்றும் ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 28.08.2023 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. தாவீதுராஜா என்பவர் உடல்நலக் குறைவு காரணமாக ஆஜராகவில்லை. அவரது ஒப்புதல் கடிதத்தின்பேரில் திரு. ந. சுபாஷ் சந்திரபோஸ் என்பவர் மனுதாரரின் சார்பாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேரூராட்சியில் 1 முதல் 15 முடிய உள்ள தெருக்களில் உள்ள வீடுகளில் சேரும் குப்பைகளை சேர்த்து, அதனை தரம் பிரித்து கொண்டு சேர்த்தல் பணி மற்றும் வளமீட்பு பூங்கா பராமரித்தல் போன்ற பணிகளையும், தெருக்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் கலந்துகொண்டேன். மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கான ஆட்களுக்கு 1 நபருக்கு ரூபாய் 448 தினக்கூலி என நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அதைவிட 30 ரூபாய் குறைவாக குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி அளித்த நிலையில், பேரூராட்சியில் என்னை L1 என குறிப்பிட்டு தீர்மானம் இயற்றியுள்ள நிலையில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை எனக்கு அளிக்காமல் அதனை நிறுத்தி வைத்துள்ளனர். எனவே மேற்கண்ட நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திரு.தாவீதுராஜா என்பவர் இம்முறை மன்றத்தில் அளித்துள்ள 10.7.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) ஆலங்குளம், பேரூராட்சியின் செயல் அலுவலர் 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

ஆலங்குளம் பேரூராட்சியில் 2023–24 ஆம் ஆண்டிற்கு வார்டு 1 முதல் 15 வரையுள்ள வார்டு பகுதிகளுக்கு பொது சுகாதாரம் குடிநீர் பராமரிப்பு மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் (வழக்கு எண் WP(MD)17014/2023) வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்கண்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி

குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 28.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மற்றும் அவர் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலம், ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. எஸ். தாவீது ராஜா என்பவர் தனது 10.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சியில் ஒப்பந்தப் பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு பேரூராட்சியால் கோரிய 2023–24 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த மனுதாரர் தலைவராக இருக்கும் அக்னி சர்வீஸ் டிரஸ்ட், ஆலங்குளம் என்கிற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்படாமல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 15 வரையிலுள்ள வீடுகளில் தினசரி குப்பைகளை சேகரம் செய்து பசுமை உரம் தயாரிக்கும் மையங்களுக்கு கொண்டு செல்வது போன்ற திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்கும் வகையில் 2023–2024ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பேரூராட்சியால் வெளியிடப்பட்டு, இதில் ஒரு பணியாளரின் தினக்கூலியானது (i) ஸ்ரீ வாரி HR ரிசோர்ஸ், திருநெல்வேலி என்கிற நிறுவனம் ரூ.510/–, (ii) ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட், திருநெல்வேலி ரூ.478/–, மற்றும் (iii) மனுதாரர் தலைவராகக் கொண்ட நிறுவனமான அக்னி சர்வீஸ் டிரஸ்ட் ரூ.448/– என ஒப்பந்த விலைப்புள்ளிகள் சமர்ப்பித்தன. இதில், மனுதாரரின் நிறுவனமான அக்னி சர்வீஸ் டிரஸ்ட் என்கிற நிறுவனம் சமர்ப்பித்த பணியாளரின் தினக்கூலி ரூ.448/– என்பது, 2022–23ஆம் ஆண்டின் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.478/– என்ற தொகையில் தினக்கூலி ரூ.30/– குறைவாக இருந்ததாலும் மேலும் இந்நிறுவனம் முன்அனுபவம் இல்லாத புது நிறுவனம் என்பதாலும் மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு தினக்கூலி ரூ.478 என விலைப்புள்ளி அளித்த ஈஸ்ட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட் என்ற நிறுவனத்தை அங்கீகரித்து பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் எண்.301, நாள் 21.6.2023–ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பேரூராட்சியால் 18.05.2023 அன்று வெளியிடப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்வது தொடர்பான ஒப்பந்தப்புள்ளியினை பேரூராட்சி செயல் அலுவலர் இறுதி உத்தரவு பிறப்பிக்கக் கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் அக்னி சர்வீஸ் டிரஸ்ட் நிறுவனத்தால் வழக்கு (வழக்கு எண் WP(MD)No.17014/2023)தொடரப்பட்டு, இவ்வழக்கு நிலுவையில் உள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் மனுதாரர் மற்றும் செயல் அலுவலரின் வாக்குமூலங்கள் மூலம் தெரிய வருகிறது.

8) இந்நிலையில் மனுதாரர் திரு.எஸ்.தாவீதுராஜா இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்து அவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப்பிரிவு 10(3)(b)–ன்படி இம்முறைமன்ற நடுவம் பரிசீலிக்க இயலாது என்பதால் இந்நேர்வு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 08 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. எஸ். தாவீதுராஜா,
9/458, தென்காசி மெயின் ரோடு,
ஆலங்குளம், தென்காசி மாவட்டம்–627851.

2) செயல் அலுவலர்,
ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி,
தென்காசி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
21/9/23